1990 மார்ச் 22]

2. தகவல் கோரல்

(அ) வடலூர் சேஷசாயி நிறுவனம் தொழிலாளர்களை ''லே-ஆப்'' செய்து இருப்பது குறித்து.

*திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் முக்கியமான ஆனால் மிகவும் வருந்தத்தக்க ஒரு பிரச்சினையை நான் இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வருகிறேன். வடலூரில் உள்ள சேஷசாயி நிறுவனம் 600 தொழிலாளர்களை லே-ஆப் செய்யப்போகிறது என்ற ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை நான் இந்த அவையில் கொண்டு வந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஜனவரி மாதம் 25-ம் தேதி லே ஆப் இல்லாமல் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வேலை தரவும்தான் ஆணையாளர் பேசிக்கொண்டிருக்கின்றார்கள் என்று சொன்னது மட்டுமல்லாமல் உடனடியாக 600 தொழிலாளர்களைக் குறைக்க இந்த அரசு ஒத்துக்கொள்ளாது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டார்கள். நாலு நாட்கள் முடிந்த உடனே 29-ம் தேதி சம்பந்தப்பட்ட அதிகாரி, ஜாயிண்ட் கமிஷனர் பார் லேபர் திரு. சண்முகசுந்தரம் அவர்கள் 'லே-ஆப்'க்கு அனுமதி கொடுத்து 500-லிருந்து 600 பேர்களுக்கு அனுமதி கொடுக்கலாம் என்று சொல்லி அதற்கான உத்தரவு அங்கே சென்றிருக்கிறது. ஏற்கெனவே இங்கே சொன்ன இந்த பதிலைக் கண்ட அந்த வடலூர் தொழிலாளர்கள் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைந்தார்கள். ஆனால் இந்த 'லே-ஆப்' உத்தரவைக் கண்ட உடனே அந்தத் தொழிலாளர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள். நான் இது குறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கும்கூட எழுதி இருக்கிறேன். இந்த 'லே—ஆப்' சம்பந்தப்பட்டவரை இது சட்ட விரோதமான 'லே—ஆப்' என்று நான் அப்போதும்கூட சொல்லியிருக்கிறேன். கம்பெனி தரப்பில் அவர்கள் சொல்லக்கூடிய காரணங்கள் பொருளாதாரக் காரணங்கள். அது சரியல்ல என்று நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். ஏராளமான லாபம் வருகிறது. வட்டிதான் அந்த லாபத்தை விழுங்குகிறது என்பதையும் நான் அன்றே சொன்னேன். இவ்வளவு இருந்தும்கூட டெக்னிக்கலாக இணை ஆணையர் அவர்கள் தவறு செய்ததைப் பற்றி நான் சொல்லவில்லை. உண்மையிலேயே சட்டத்திலேகூட லே ஆப் செய்வதற்கு பொருளாதாரக் காரணம் கூடாது என்று இருக்கிறது. உயர்நீதி மன்றத் தீர்ப்புகளும், உச்சநீதி மன்றத் தீர்ப்புகளும் பொருளாதாரக் காரணத்தினால், 'லே—ஆப்' செய்யக்கூடாது என்று இருக்கிறது. அப்படி இருந்தும்கூட இந்த 'லே—ஆப்' செய்யப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல,

அவர்களுடைய பொருளாதார நிலைமையை எடுத்துக் கொண்டால்கூட அவர்கள் சொல்லக்கூடிய காரணம் சரியல்ல. நான் எல்லாவற்றிற்கும் போகவில்லை. உதாரணத்திற்குச் சொல்கிறேன். லாபம் வருகிறது என்று ஏற்கெனவே சொல்லிவிட்டேன். வட்டிதான் அந்த லாபத்தை விழுங்குகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் சொற்பொழிவு கூடாது! சுருக்கமாகச் சொன்னால் அமைச்சர் அவர்கள் விடை சொல்வார்கள்.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே பிரச்சினை இந்த மன்றத்திலே வரக்கூடிய காரணத்தினால் திருப்பித் திருப்பி அதிகாரிகள் இங்கே தவறான தகவல்களைக் கொடுத்து அதனுடைய அடிப்படையிலே அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்து அது நிறைவேற்றப்படமுடியாமல் இருக்கின்ற சூழ்நிலை இருக்குமானால் அது பரிதாபமான நிலைமையாகிவிடும் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினை மிக முக்கியமானதாக இருந்தால் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரலாம். அதைவிட மிக முக்கியமானதாக இருந்தால் அட்ஜெர்ன்மெண்ட் மோஷன் கொண்டுவரலாம். ஆனால் இப்படிப்பட்ட நேரங்களில் சில பிரச்சினைகளை சொல்வார்கள். அவைகளுக்கு அமைச்சர்கள் பதில் அளிப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பெரிய பிரசங்கமே செய்து கொண்டிருக்கின்றார்கள். இதே முறைதான் இந்த மன்றத்திலே கையாளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அட்ஜெர்ன்மெண்ட் மோஷன்தான் கொடுத்தேன். இந்த மன்றத்தில்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள் அதற்கு மேல் போகக்கூடாது. விவரங்கள் எல்லாம் வேண்டியதில்லை.

திரு. சி. கோவிந்தராஜன் : கடந்த ஆண்டு 11 கோடி ரூபாய் கடன் எழுதினார்கள். அடுத்த ஆண்டு அதாவது இந்த ஆண்டு ரூபாய் 13 கோடி கடன். இப்படி 2 கோடி ரூபாய் அதிகக் கடன் என்று சொல்லி, அதற்கு 1 கோடியே 4 லட்சம் ரூபாய் வட்டி என்று எழுதுகிறார்கள். இந்த நாட்டில் இப்படியும் நடைபெறுகிறது. எனவே அந்தக் கணக்குகளே சரியல்ல.

1990 மார்ச் 22] [திரு. சி. கோவிந்தராஜன்]

எனவே ''லே-ஆப்'' சட்ட விரோதமானது என்பது மட்டுமல்ல அவர்கள் தொழிலாளர்களுக்கு 2 மாதம் சம்பளமே கொடுக்காத காரணத்தினால், அது குறித்து, கலெக்டர் அவர்களுடன் கூட பேசினார்கள். இந்த மாதம் 7-ம் தேதிக்குள் கொடுக்கச் சொல்லியும்கூட கொடுக்காத காரணத்தினால் 8-ம் தேதியிலிருந்து தொடர்ந்து தொழிலாளர்கள் உண்ணாவிரதம் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். காலவரையறையின்றி உண்ணாவிரதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உண்ணாவிரதத்தினால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்கிறார்கள். தொழிலாளர்களுக்கு ஆதரவாக நேற்றைய முன்தினம் கடையடைப்பு எல்லாம் செய்யப்பட்டிருக்கிறது. நான் சொல்வது என்னவென்றால் சட்டமன்றத்தில் கொடுக்கக்கூடிய வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டும். அந்த நிர்வாகம் சொல்லக்கூடிய காரணம் சரியல்ல. 'லே—ஆப்' உத்தரவை மறு பரிசீலனை செய்வதற்கு அந்த அதிகாரிக்கு நான் எழுதியிருந்தாலும்கூட 25 எம் செக்ஷன், சப் செக்ஷன் 7 பிரகாரம் அரசே பரிசீலனை செய்து அந்த லே ஆப் உத்தரவை நீக்கமுடியும். இந்த 2 மாதச் சம்பளத்தையும் உடனடியாகக் கொடுப்பதற்கு உத்தரவிடவேண்டும்—பேமென்ட் ஆப் வேஜஸ் ஆக்ட்—படி மாதாமாதம் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அதுவும் மீறப்பட்டுள்ளது. நேற்றைய தினம் பேச்சுவார்த்தை நடத்தும்போது அவர்கள் ஜனவரி மாதச் சம்பளத்தை மார்ச் மாதம் 31 லேயும் பிப்ரவரி மாதச் சம்பளத்தை ஏப்ரல் 30 தேதியிலே கொடுப்பதாக சொல்கிறார்கள். தொழிலாளர்கள் எப்படி தாங்கமுடியும்? (மணியடிக்கப்பெற்றது) அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதை நான் முதல் அமைச்சர், தொழிலாளர் நல அமைச்சர் இருவருடைய கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன்.

10—10 மணி

*மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தமுறை, சட்டமன்றக் கூட்டத்தின் போது மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் கேட்ட கேள்விக்கு இந்த அரசு எப்போதும் தொழிலாளர்கள் பக்கம்தான் இருக்கும், அந்தத் தொழிற்சாலையில் இருக்கின்ற 600 தொழிலாளர்களைக் குறைக்க இந்த அரசு அவர்களிடம் ஒத்துழைக்காது என்றுதான் சொன்னேன். இன்றைக்கு, அந்தத் தொழில் அதிபர்கள் சட்டப் பிரிவு 25-ன்கீழ் தொழில் துறை அதிகாரிகளிடம், எங்களது கம்பெனி 1985—86 ஆம் ஆண்டும், 1986—87 ஆம் ஆண்டும், அதிலிருந்து இதுவரை தொடர்ந்து நஷ்டக் கணக்கிலேயே ஓடிக் கொண்டிருப்பதால் எங்களுடைய தொழிலாளர்களை ' லே—ஆப் ' செய்ய அனுமதிக்க வேண்டுமென்ற சட்டப்பூர்வமான ஒரு கோரிக்கையை தொழிலாளர் நல ஆணையாளரிடம் அளித்திருக்கிறார்கள். அதை விசாரிக்க வேண்டிய

[திரு. கே. என். நேரு] [1990 மார்ச் 22

அதிகாரி விசாரிக்கும்பொழுது, ஏற்கெனவே அவர்களிடம் தொடர்ந்து நஷ்டம் எற்பட்ட காரணத்தாலும், ரா மெட்டீரியல்ஸ் வாங்கக் கூட பணம் இல்லாத காரணத்தாலும், தொழிலாளர்களை எந்தவிதத்திலும் வேலையைவிட்டு நீக்கக்கூடாது என்ற எண்ணத்தில் 34 ஆயிரம் மனித வேலை நாட்கள் வேலையே இல்லாமல் அவர்களுக்கு சம்பளத்துடன் லீவு தரப்பட்டிருக்கிறது. தொடர்ந்து இப்படி செய்ய எங்களால் இயலாது என்றும், எங்களுக்கு 500 அல்லது 600 தொழிலாளர்களை 'லே—ஆப்' செய்வதற்கு நீங்கள் அனுமதி அளிக்க வேண்டுமென்றும் தொழிலாளர் நல ஆணையாளர் அவர்களிடம் கேட்டபோது, அதை விசாரித்து ஆணையாளர் அவர்கள் கூறுகின்றதில் ஓரளவு நியாயம் இருக்கிறது என்ற காரணத்தால் அவர்களுக்கு 'லே-ஆப்'-க்கு வாய்ப்புத்தந்து அனுமதி அளித்திருக்கிறார்கள். நீங்கள் இப்படி 500 அல்லது 600 தொழிலாளர்களை 'லே—ஆப்' செய்வதற்கு அனுமதி அளிக்கவில்லையென்றால் நிச்சயமாக தொழிற்சாலையை மூடுவோம் என்று அவர்கள் சொன்ன காரணத்தால் தொழிலாளர்களும் பாதிப்புக்கு ஆளாகக் கூடாது. 'லே-ஆப்' செய்கிறார்கள் என்றால் தொழிலாளர்களுக்கு பாதி அளவுக்காவது சம்பளம் கிடைக்கும் என்ற காரணத்தால்தான் 'லே—ஆப்' விடப்பட்டிருக்கிறது. மீண்டும் அங்கேயிருக்கின்ற சி. ஐ. டி. யு. தொழிற் சங்கம் அதே அதிகாரிகளிடம் மனு செய்திருக்கின்றது. நீங்கள் 'லே-ஆப்' செய்திருப்பது தப்பு என்று சொல்லி மனு கொடுத்திருக்கிறார்கள். அதையும் இப்போது விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். உடனடியாக சம்பளம் தர வேண்டுமென்று உண்ணாவிரதம் இருந்தபோது, அதிகாரிகள் உடனடியாக அவர்களைச் சந்தித்து பேசியபோது அவர்களிடம் பணம் இல்லாத காரணத்தால் உடனடியாகத் தர இயலாது, ஜனவரி மாதச் சம்பளத்தை மார்ச் மாதத்திலும், பிப்ரவரி மாதச் சம்பளத்தை ஏப்ரல் மாதக் கடைசியிலும் தருவதாகச் சொல்லி அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். அதையும் பிரதிநிதிகள் ஒத்துக்கொண்டு போயிருக்கிறார்கள். இருந்தும், திரு. கோவிந்தராஜன் அவர்கள் அதே அதிகாரிகளிடம் ரெவ்யூ பெட்டிசன் போட்டிருக்கிறார். உடனடியாக விசாரித்து ஒரு நல்ல முடிவை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்

இராமநாதபுரம் மாவட்டத்தில் பட்டணம்காத்தான் சோதனைச் சாவடி தொடங்கி தஞ்சை மாவட்டம் மீமிசல் வரை சிலர் கண்மூடித்தனமாகச் சுட்டதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள், அண்மையில் பட்டணம்காத்தான் காவல்சாவடி தொடங்கி, தஞ்சை மாவட்டம் மீமிசல் வரை